

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.09.2023) தருமபுரி, கோட்டக்கோயில், மல்லிகார்ஜுனேஸ்வரர் மற்றும் பரவாசுதேவர் திருக்கோயில் திருத்தேர் புனரமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, இந்து சமய அறநிலையத்துறை தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) திருமதி ஜி.விஜயா, மண்டல இணை ஆணையர் திருமதி வே.சபர்மதி, தருமபுரி மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் பெ.கௌதமன், தருமபுரி உதவி ஆணையர் மா.உதயகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பீகாரில் படகு கவிழ்ந்து விபத்து!

பாட்னா, செப். 15 -

பீகார் மாநிலம் முசாபர்புர் மாவட்டத்தில் பாக்மதி நதி ஓடிக் கொண்டிருக்கிறது. மதுபுர் பாத்தி காட் இடையே, 30 குழந்தைகளை படகு ஒன்று பள்ளிக்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்தது. இந்த படகு திடீரென கவிழ்ந்தது. இதனால் குழந்தைகள் தண்ணீர் தத்தளித்தனர். உடனடியாக மீட்புப்பணி நடைபெற்றது. இதன் பயனாக 20 குழந்தைகள் மீட்கப் பட்டனர்.

ஆனால், 10 குழந்தைகளை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தத் தகவல் அறிந்த தும் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் "மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. இவ்விவகாரத்தை அவசரமாக கவனிக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக் கொண்டேன்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் அரசு செய்யும்" எனத் தெரிவித்துள்ளார்.

முற்போக்கு அறநெறியாளர் முகமது நபி !



உருவ வழிபாட்டையும் பலதெய்வ வணக்கத்தையும் ஒழித்துக் கட்டும் தமது குறிக்கோளுக்காக உயிரையே பணயம் வைத்துப் போராடினார் ஒரு புரட்சி ஞானி !

எழுதப் படிக்கத் தெரிந்த கல்வி அறிவே இல்லாதவராக இருந்தும், மூட நம்பிக்கைகளை முறியடிக்கும் மூளை வலிமை மிகுந்தவராக அறநெறிகளை முழங்கினார் அந்தச் சொந்தச் சிந்தனையாளர்.

வணிகத் தொழிலின் நுணுக்கங்களை நன்றாக அறிந்து, வளமான வாழ்க்கை நடத்தும் வாய்ப்புகள் வந்த போதும், சொத்துப் பற்றையே துறந்து, பசியிலும் நோயிலும் துடிப்பவர்க்குப் பரிவுகாட்டி உதவச் சொன்ன அறநெறிகளின் அரிய பேரொளி முகமது நபி !

- பேரறிஞர் அண்ணா

ஒரே நாடு ஒரே தேர்தல், சுய லாபத்திற்காக

மாநிலங்களை முழு கட்டுப்பாட்டில் வைக்க முயல்கிறார் மோடி!

'தினகரன்' தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, செப். 15-

ஒரே நாடு ஒரே தேர்தல் என கூறிக்கொண்டு தனது சுய லாபத்திற்காகவும் மாநிலங்களை முழு கட்டுப்பாட்டில் வைக்க முயலும் முயற்சி என மோடியை 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

அது வருமாறு:-

'ஒரே நாடு ஒரே தேர்தல்' விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி 2018லிருந்து தொடர்ந்து பேசி வருகிறார். பா.ஜ. ஆட்சி செய்யும் மாநிலங்களை தவிர, மற்ற மாநிலங்களில் இந்த முடிவுக்கு எதிர்ப்புகளே கிளம்பியுள்ளன.

ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தும்போது செலவினங்கள் குறையும். ஒன்றிய அரசின் திட்டங்கள் தங்குதடையின்றி மாநிலங்களை சென்றடையும். தேர்தல் பாதுகாப்பு அம்சங்களுக்கும் பிரச்சினை ஏற்படாது என கூறுகிறது பா.ஜ. அரசு. ஆனால், ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. அதற்கு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல அரசியல் சட்டங்களை திருத்த வேண்டும்.

அதாவது, நாடாளுமன்றம், சட்டமன்றத்தை கலைத்தல், மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துதல் உள்ளிட்ட சட்டங்களில் திருத்தம் கொண்டு வர வேண்டும். இதற்கு மாநில கட்சிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

தினகரன்

செப்டம்பர் 14, 2023 வியாழக்கிழமை

மாநில உரிமை பறிபோகும்

'ஒரே நாடு ஒரே தேர்தல்' விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி 2018லிருந்து தொடர்ந்து பேசி வருகிறார். பாஜ ஆட்சி செய்யும் மாநிலங்களை தவிர, மற்ற மாநிலங்களில் இந்த முடிவுக்கு எதிர்ப்புகளே கிளம்பியுள்ளன.

'ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தும்போது செலவினங்கள் குறையும். ஒன்றிய அரசின் திட்டங்கள் தங்குதடையின்றி மாநிலங்களை சென்றடையும். தேர்தல் பாதுகாப்பு அம்சங்களுக்கும் பிரச்சினை ஏற்படாது என கூறுகிறது பாஜ அரசு. ஆனால், ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. அதற்கு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல அரசியல் சட்டங்களை திருத்த வேண்டும். அதாவது, நாடாளுமன்றம், சட்டமன்றத்தை கலைத்தல், மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துதல் உள்ளிட்ட

கடந்த 2019ல் ஆட்சிக்கு வந்த பா.ஜ. அரசின் ஆட்சிக் காலம் அடுத்தாண்டு முடிவடைய உள்ளது. இதனையொட்டி, 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான பணிகள் தொடங்கி நடந்து வருகின்றன. நடப்பாண்டின் இறுதியில் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், தெலங்கானா, சட்டீஸ்கர், மிசோரம் மாநிலங்களில் சட்டசபை தேர்தல்கள் நடைபெற உள்ளன.

கடந்தாண்டு உத்தரப்பிரதேசம், குஜராத், பஞ்சாப் உட்பட 5 மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. மேலும், ஒடிசா, ஆந்திரா, அருணாச்சல பிரதேசம், சிக்கிம் ஆகிய மாநிலங்களிலும், தொடர்ந்து அரியானா, மகாராஷ்டிரா மாநிலங்களிலும் சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற உள்ளன. கடந்த மே மாதம்தான் கர்நாடகா மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்து, காங்கிரஸ் கட்சி ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ளது. மேலும், பல மாநிலங்களில் ஆட்சிகள் முடிய 2, 3 ஆண்டுகள் மீதமுள்ளன. தேர்தல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமானவை. ஒரு வாக்காளருக்கு தேசிய பார்வை ஒன்று இருக்கும். மாநில பார்வை ஒன்று இருக்கும்.

இதில், ஒன்றை தவறாக செய்தாலும் வாக்காளர்களுக்கு தேவையற்ற குழப்பங்களே ஏற்படும். தேர்தல் பிரசார வியூகம் அமைப்பதில் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படும். மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப் படும். அதிபர் முறையை கொண்டு வருவதற்கான முயற்சியே ஒன்றிய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் கோஷமென கூறி, தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட பல் வேறு அரசியல் கட்சி தலைவர்கள், இதற்கு கடுமையான எதிர்ப்புகளை தெரி வித்துள்ளனர். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் போது, சுமார் ரூ.10 லட்சம் கோடி வரை செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலங்களிலும் பதற்றமான தொகுதிகள், வாக்குச்சாவடிகள் உள்ளன.

இதனை மனதில் கொண்டு கூடுதல் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மாநில போலீசார், மத்திய பாதுகாப்பு படையினரை கொண்டு, ஒட்டுமொத்த தேர்தல்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது, இந்தியா போன்ற நாடுகளில் அவ்வளவு எளிதான விஷயமல்ல. இதனால் தேர்தல் நியாயமான, பாதுகாப்பான முறை யில், நம்பகத்தன்மையோடு நடக்கும் என உறுதியாக கூறி விட முடியாது. மாநிலங்களை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் முயற்சிதான், ஒரே நாடு ஒரே தேர்தல் என்கின்றனர் எதிர்க்கட்சியினர். வரும் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை, ஒன்றிய அரசு சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்டியுள்ளது. இந்த கூட்டத்தொடரில், இந்த மசோதாவை நிறைவேற்றும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபட்டால், அதனை வலுவாக எதிர்க்கவும் எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளன.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் விமர்சித் துள்ளது.

ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. முன்னிலையில்

ஆவடி - சேக்காட்டில் ரூ.28.30 கோடி மதிப்பீட்டில் புதிய ரயில்வே சுரங்கப்பாதை!

அமைச்சர்கள் எ.வ.வேலு - ஆர்.காந்தி திறந்து வைத்தனர்!

திருவள்ளூர் செப் 15;-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பட்டாபிராம், சேக்காடு ரூ.28.30 கோடி மதிப்பீட்டில் புதிய ரயில்வே சுரங்கப்பாதை பணிகள் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டிற்காக பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் தமிழ்நாடு நூல் மற்றும் கைத்தறி துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி.சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் பொன்னான ஆட்சியில், முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஆவடியை அடுத்து பட்டாபிராம், இந்து கல்லூரி ரயில் நிலையங்களுக்கு இடையே சேக்காடில், இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் ரயில் பாதையை கடக்க, சிறிய சுரங்கபாதை இருந்தது. அந்த பாதை, மழை காலங்களில் தண்ணீரில் மூழ்கி மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து அந்த இடத்தில், ரயில் பாதைக்கு கீழே பாதுகாப்பான கீழ்ப்பாலம் எனப்படும் சுரங்கப்பாதை அமைக்க மத்திய மாநில அரசுகள் முடிவு செய்தது. அதற்காக ரயில்வே நிர்வாகத்துடன், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள், செங்கல்பட்டு கோட்டம் வாயிலாக, 28.30 கோடி ரூபாய் மதிப்பில், புதிய சுரங்கப்பாதை அமைக்கும் பணி, கடந்த 2019 ல் ஜனவரியில் துவங்கி இந்த ஆண்டு பணிகள் நிறைவடைந்தது

அதன்படி, சுரங்கபாதையில் இருசக்கர வாகனம், கார், வேன் உள்ளிட்ட இலகுரக வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் சென்று வரும் வகையில், 13 அடி அகலம், 16 அடி உயரம் கொண்ட இரு வழி பாதை அமைக்கப்பட்டுள்ளது.

ரயில்வே துறைக்கான இடத்தில், 262 அடி நீளம் சுரங்க பாதையும், அதன் இரு பக்கத்திலும், தலா 600 அடி நீளத்திற்கு ரயில்வே பாதையை கடப்பதற்கான இணைப்பு சாலை அமைக்கும் பணிகள் நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குனர் என்.சாந்தி, நெடுஞ்சாலைத் துறை நபார்டு மற்றும் கிராம சாலை தலைமை பொறியாளர் முருகேசன், தலைமை பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமை பொறியாளர் ஆர்.சந்திரசேகர், உதவி பொறியாளர் சேதுராமன், ஆவடி மாநகர கழக பொறுப்பாளர் சன்பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி நாராயண பிரசத், அமுதா பேபிசேகர், பகுதி கழக செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பொன் விஜயன் அரசு அதிகாரிகள் ஆவடி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மற்றும் ஆவடி மாநகராட்சியின் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்கள்

6 ஆம் ஆண்டு
நினைவு நாள்

எங்களின் நினைவில் வாழும் தகப்பனார்

பொ.இராமச்சந்திரன்

அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு
பொ.இராமச்சந்திரன் அறக்கட்டளை சார்பில்

1000 பேருக்கு அன்னதானம் வழங்குதல் மற்றும்
ஆம்னி வேன் - 1
நீத்தார் நினைவு தங்க ரதம் - 1
நீத்தார் குளிர் சாதன பெட்டி - 2

ஆகியவை மக்கள் பயன்பாட்டிற்காக
சைதை கிழக்கு பகுதி தி.மு.க.விடம்
வழங்கும் நிகழ்ச்சிக்கு

வருகை தரும்

மாண்புமிகு.
மா.சுப்பிரமணியன் B.A., LLB.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
அவர்களே வருக! வருக!!

இரா.விசாலாட்சி
இரா.திருவேங்கடம் -தனலட்சுமி
தொழிலதிபர்

இரா.துரைராஜ் - லலிதா
சைதை கிழக்கு பகுதி தி.மு.க.செயலாளர்
13வது மண்டலக்குழுத் தலைவர்

இரா.கனகராஜ் D.I.G (சிறைத் துறை) - ரம்யா
வழக்கறிஞர் இரா.சசிகுமார் - பிரியதர்ஷினி
ப.கீதா-பச்சையப்பன்